புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# ஜெயகாந்தன் சிறுகதைகளில் பாத்திரப் படைப்பாளுமை

**ஆய்வாளர்**
*ஆ. மகேஸ்வரி, தமிழ்த்துறை*
*அரசு கலை மற்றம் அறிவியல் கல்லூரி*
*திருவாடானை - 623407*

**நெறியாளர்**
*முனைவர் மு.பழனியப்பன்*
*இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*அரசு கலை மற்றம் அறிவியல் கல்லூரி*
*திருவாடானை - 623407*

*தமிழ்ச்சிறுகதை உலகில் தனக்கென தனித்த இடம் பிடித்த எழுத்தாளர் ஜெயகாந்தன் ஆவார். இவரின் சிறுகதைகள் பல்வேறு கதைக்கருக்களைக் கொண்டவை. எனினும் இக்கதைக்கருக்கள் மானிடப் பண்பினை அடிப்படையாகக் கொண்டவை. மனிதர்களின் உணர்வு, உணர்விற்கேற்ற வெளிப்பாடுகள், வெறுப்புணர்வு, தோழமை உணர்வு, இரக்க உணர்வு, அன்பு போன்றவற்றை வெளிப்படுத்தும் கதைகளை ஜெயகாந்தன் படைத்துள்ளார். இவரின் சிறுகதைகள் அனைத்தும் முழுத் தொகுப்பாக கவிதா வெளியீட்டு நிறுவனத்தால் வெளியிடப்பெற்றுள்ளன. இம்முழுத்தொகுப்பே எட்டு பதிப்புகளைக் கண்டுள்ளது. இவரின் கதைகள் அடித்தட்டு மக்களின் வாழ்வியல் சார்ந்து அமைந்துள்ளன. அடித்தட்டு மக்களின் வாழ்வைச் சித்திரிக்கும் நிலையில் அம்மக்களைக் கதைகளின் பாத்திரங்களாக ஆக்கும்போது அம்மக்களின் ஏழைமை வாழ்வின் துயரங்களை அவர் இணைத்துப் படைக்கின்றார். எனவே இவரின் சிறுகதைகள் சிறுகதைகளாக மட்டும் இல்லாமல் இவர் காலத்தில் வாழ்ந்த சென்னையின் நடைபாதை மக்களின் வரலாற்றுப் பதிவுகளாகவும் விளங்குகின்றன. ஜெயகாந்தன், நடை பாதை மக்களின் வாழ்வினை இடைத்தட்டு, உயர்தட்டு மக்கள் அறிந்து கொள்ள ஏதுவாகக் கதைகளைப் படைத்தளித்துள்ளார். நடைபாதை மக்களிடத்திலும் காதல்,, அன்பு, பற்று , பாசம், இரக்கம், உதவும் மனப்பான்மை, துயரங்களில் மகிழ்வுகளில் பங்கு கொள்ளும் நிலை போன்றன இருப்பதை இவரின் கதைகள் எடுத்துக்காட்டுகின்றன. இவரின் பாத்திரங்கள் இயல்பானவை. ஆனால் தத்துவ அடிப்படையில் சிந்திக்கும் திறனுடையவை. இவர்தம் கதைகளில் இடம்பெறும் கதை மாந்தர்கள் நேர்முகத் தன்மை உடையவர்கள். சூது அற்றவர்கள். இதன் காரணமாக இம்மக்களின் எளிய வாழ்க்கை இவரின் எழுத்துக்கரம் பட்டு இலக்கியத் தரம் பெற்றுவிடுகின்றன.*

*இவர் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தேழாம் ஆண்டு சரசுவதி இதழில் எழுதிய ஒருபிடி சோறு, பால் பேதம், ராசா வந்துட்டாரு, எது. எப்போது, தாம்பத்யம், ஒரு பிரமுகர், திரஸ்காரம் ஆகிய ஏழு கதைகளைக் களமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகின்றது.*

***ஜெயகாந்தனின் பாத்திரப்படைப்புத் திறம்***

*மு.சுதந்திர முத்து தன்னுடைய படைப்புக் கலை என்ற நூலில் ‘‘உண்மையான பாத்திரங்களைப் படைக்க விரும்பும் எழுத்தாளர் தம் பார்த்த மனிதர்களையும் பழகிய மனிதர்களையும் கொண்டு அவர்களது பலவகைப் பண்புகளில் இருந்து கதைக்குத் தேவையான சில பண்பகளை மட்டும் எடுத்துப் பயன்படுத்த வேண்டும்.... அதே நேரத்தில் பல கதைகளில் படைக்கப்பெற்றுக் கொண்டிருப்பதைப் போல வார்ப்புப் பாத்திரங்களைப் படைத்துவிடக் கூடாது. வேறுபாடான பாத்திரங்களைப் படைப்பது நல்லது. ஜெயகாந்தன் படைத்த பல பாத்திரங்கள் வேறுபாடானவர்கள்’’ [1] என்று ஜெயகாந்தனின் பாத்திரப்படைப்புச் சிறப்பினை எடுத்துரைக்கிறார் சுதந்திரமுத்து. வேறுபாடான பாத்திரங்களைக் கொள்கை உணர்வுடன் படைத்துக்காட்டியவர் ஜெயகாந்தன் ஆவார். ’’பாத்திரங்களை உருவாக்குவதற்குப் பல்வேறு உத்திகள் உண்டு. பாத்திரங்கள் மேற்கொள்ளும் சிறு சிறு நடத்தைகளிலிருந்தும், அவர்களுடைய தன்மை வெளிப்படும்.’’[2] என்ற கருத்தின்படி பாத்திரப்படைப்பு என்பது உலக மாந்தரைக் கவனிக்கும் திறனில் உள்ளது. இத்திறன் ஜெயகாந்தனுக்கு இயற்கையாகவே வாய்த்துள்ளது. அவர் நடை பாதை மக்களின் வாழ்க்கை நெருங்கிப் பார்த்தவராக இருக்கவேண்டும். இதன் காரணமாகவே அவரால் உயிர்ப்பான பாத்திரங்களை அந்நிலையில் படைக்கமுடிந்து*

***கதைப்போக்கு***

*ஒருபிடி சோற்றுக்காகக் கர்ப்பிணிப் பெண் படும் அவஸ்தையை ஒரு பிடி சோறு காட்டுகிறது. உயர்திணை , அஃறிணை உயிர்களுக்கான பால் பேதத்தைக் காட்டுவதாக பால் பேதம் என்ற கதை அமைகிறது. ராசா வந்துட்டாரு என்ற கதையில் ஒரு மூதாட்டி இராணுவத்திற்குப் போன கணவன் திரும்பி வருவான் நல்வாழ்வு அமையும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்து தன் உயிரை அந்த ராஜா வந்ததாகக் கருதி கடலில் நீப்பதாகக் கதைக் கரு அமைகிறது. எது, எப்போது என்ற கதையில் மைக்கேல என்ற படித்த மனநிலை சரியில்லாத மனிதன் எச்சில் இலைச் சோறு கிடைத்ததும் அதனைப் பெற ஓடும் நிலையைக் காட்டுவதாக உள்ளது. தாம்பத்யம் என்ற கதை நடைபாதை தம்பதியர் முதல் இரவு சந்திப்பதைச் சந்திக்கக் கூட இயலாத நிலையைக் காட்டுவதாக உள்ளது. கட்டெறும்பு ஒன்றின் உலகத்தைக் காட்டுவதாக விளங்குவது ஒரு பிரமுகர் என்ற கதை. தணிகாசலம் என்ற முதியவர் தனது கடந்த கால வாழ்வில் காதலியாக வந்த தங்கத்தின் நினைவுகளைப் பகிரும் நிலையில் அமைவது திரஸ்காரம் என்ற கதை. இவ்வாறு எளிய மக்களின், எளிய உயிர்களின் மன ஓட்டங்களைக் காட்டும் கதைகளாக இக்கதைகள் அமைந்துள்ளன. இவற்றில் இடம் பெறும் பாத்திரங்கள் தனக்கென தத்துவச் சிந்தனை கொள்கை உடையனவாக விளங்குகின்றன. அவையே ஜெயகாந்தனின் தனித்துவ எழுத்தாளுமையை வெளிப்படுத்து வனவாக உள்ளன.*

***பாத்திரங்களும் அவ்வவற்றிற்காக தத்துவார்த்தங்களும்***

முன்சுட்டப்பட்ட ஏழு கதைகளின் தலைமைக் கதை மாந்தர்கள் தனித்த தனக்கான கொள்கையுடன் இயங்குகின்றனர் இந்தக் கொள்கையை அடையவும், நிலை நிறுத்தவும், அப்பாத்திரங்களை வளப்படுத்துகிறார் ஜெயகாந்தன்.

**மண்ணாங்கட்டியும் தாய்ப் பாசமும்**

ஒருபிடி சோறு கதையில் தன் தாய் ராசாத்தி ஒரு பிடி சோற்றுக்காகப் பட்ட அவஸ்தையை ஒவ்வொரு முறையும் சாப்பிடும்போது எண்ணிப்பார்க்கிறான் அவளின் மகன் மண்ணாங்கட்டி. அம்மாவாசைக்கு அம்மாவாசை மட்டும் தாய்க்குத் தர்ப்பணம் செய்யும் மேல்த்தட்டு மக்களை விட உண்ணும்போதெல்லாம் ஒரு கைப்பிடி வைக்கும் அம்மாவாசை கொள்கையில் பௌர்ணமியாக விளங்குகிறான். இக்கதையில் அம்மாவாசை மாரியாயி என்பவளின் வீட்டில் சமைக்கப்பட்ட சோற்றைத் திருடித் திண்பான். இவன் தின்றுவிட்டான் என்பதற்காக சண்டை போட்டு ராசாத்தியைக் காயப்படுத்திய மாரியாயி பின்னாளில் ராசத்தியின் உணவிற்கு அரிசி தருபவளாகவும், ராசாத்தி இறந்த பின் அம்மாவாசையைத் தன் மகனாகப் பாவிக்கும் தாயாகவும் படைக்கப்பெற்றுள்ளாள். எளிய மனிதர்களுக்குள் ஏற்பட்டும் சண்டை சச்சரவுகள் அதிக வலிமையற்றவை என்பதை இக்கதையின் பாத்திரங்கள் உணர்த்துகின்றன.

‘‘ஹேய் .... ஹேய்ன்னானானாம்!- அதோ விரலைச் சொடுக்கிக் குதித்தோடி வருகிறதே ஒரு கரிக்கட்டை -அவன் தான் ராசாத்தியின் ஏக புத்திரனான மண்ணாங்கட்டிச் சிறுவன். தென்னாற்காடு ஜில்லாவாசிகளைத் தவிர மற்றவர்களுக்குப் பெயர் வேடிக்கையாகத்தான் இருக்கும். ராசத்தியின் இறந்து போன அப்பனின் பெயர் அது. கிழவன் மீது கொண்ட ஊமைப் பாசம் இப்பொழுது மகன் மீது சொரிகிறது’’[3] என்று மண்ணாங்கட்டி கதையில் அறிமுகம் ஆகிறான். இதன்பின் அம்மாவிடம் அவனுக்கு இருந்து அன்பு, அவனின் விட்டேந்தித் தனம் போன்றனவெல்லாம் அவனை ஊதாரியாக வாசகருக்குக் காட்டினாலும் தாய் இறந்ததை எதிர்பார்க்காத மண்ணாங்கட்டியின் மனசு அவ்விறப்பிற்குப் பின் நிலைகுலைந்து போய் விடும் நிலையையும் வாசகர்கள் உணரமுடிகின்றது. தாயே உலகம் என வாழும் கொள்கை உடைய பாத்திரமாக மண்ணாங்கட்டி வாழ்கிறான்.

**லெட்சுமியும் கன்றின் பாசமும்**

‘‘பால் பேதம்’’ என்ற கதையில் வேலம்மாள் என்பவளுக்குக் குழந்தை பிறக்கிறது. அதே நேரம் அவள் வளர்த்த லெட்சுமி என்ற பசு ஒரு கன்றையும் ஈனுகிறது. இவ்விரண்டும் பால் குடிப்பதில் ஒன்றாய் விளங்குகின்றன. வளர்வதில் ஒன்று போல் வளர்ச்சி பெற்று வருகின்றன. சில நாள்களில் குழந்தை இறந்து போகிறது. லட்சுமியின் பால் மடியும் வற்றிப் போகிறது. அதனை அடிமாடாக ஆக்கிவிட வேலம்மாளின் கணவன் முயல லட்சுமி மறுக்க வேலம்மாளும் அதனை அடித்து விரட்டுகிறாள். தன்னை வணங்கி வளர்த்த வேலம்மாளும் விரட்டுவது லெட்சுமி மாட்டிற்கு மிக்க வருத்தத்தை அளித்தது. லெட்சுமி தன் கன்றின் தோல் உள்ள திணிக்கபட்ட வைக்கோலால் ஆன கன்றை விட்டுச் செல்ல மனமில்லை. லெட்சுமியின் கன்றும் இறக்க, வேலம்மாளின் குழந்தையும் இறக்க லெட்சுமி இதனை உணர வேலம்மாள் உணராமல் தன்னை விரட்டுகிறாள் என்று எண்ணுகிறது லெட்சுமி மாடு.

*"செத்துப்போன தனது குழந்தையைக் குழியில் வைக்க வாரிக் கொடுத்துவிட்ட வேலம்மாளுக்கு தோல் மீது பாசம் வைத்து வதைபடும் இந்த மாட்டின் அறிவற்ற பாசம் புரிந்துவிடுமா என்ன? "[4]என்ற தொடர் மாட்டிற்கு உள்ள பாச இயல்பினைக் காட்டுவதாக உள்ளது.*

**<u>தங்கராசுவின் குடும்பமும், பிரம்மச்சாரி வாழ்வும்</u>**

*கன்னியம்மையும் , தங்கராசும் குடிசையில் வாழும் தம்பதியர். தங்கராசு சிறுகடை நடத்தி வாழ்வை நகரத்தி வந்தான். இருப்பினும் அவன் தானும் மனைவியும் சிறப்புடன் வாழ 1914 ஆம் ஆண்டு நடைபெற்ற சண்டையின்போது இராணுவத்தில் இணைகிறான். அவன் திரும்பி வருவான் என்று கன்னியம்மை காத்திருந்தாள். அவன் 1945 இரண்டாம் உலகப்போர் முடிந்த நிலையிலும் வந்து சேரவில்லை. அவன் வருவான் என்று காத்திருந்த கன்னியம்மை அவன் வந்ததாக எண்ணி ஒரு நாள் இரவில் அவள் துறைமுகத்திற்கு வருகிறாள். அன்றும் வராத நிலையில் அவள் உயிர் துறக்கிறாள். இந்தக் கதையில் இடம்பெறும் தங்கராசு சிறந்த சிந்தனாவாதியாக விளங்குகிறான். '' உலகத்திலே ஓர் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழறதுதான் சொர்க்கம். ஆனால் அந்த சொர்க்கத்தில் பசியும் பட்டினியும் பிக்கலும் பிடுக்கலும் ஏற்பட்டா அதெவிட நரகம் வேறொன்னுமில்லே. ஆமா. அதைவிட ஒத்தை கட்டையா காலம் தள்ளிடலாம். ஜமீனை ஆளறதுக்கு வாரிசு இல்லாம போயிடப் போவுதா"[5] என்ற தங்கராசுவின் சிந்தனைப் படியே அவன் திருமண வாழ்வில் பொருள் தட்டுப்பாடு ஏற்படும் நிலையில் பிரம்மச்சாரியாக வாழ இராணுவத்திற்குச் சென்று விடுகிறான்.*

**<u>தனிமனித எண்ணமும் எச்சில் இலையும்</u>**

*படித்த மைக்கேல் என்பவன் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் சென்னையின் முதன்மைச் சாலையில் திரிந்து வருகிறான். அவன் வேத புத்தகத்தைத் தன் ஜோல்னா பைக்குள் வைத்துச் சுமந்து செல்பவன். இன்னும் பல பொருள்கள் அவனது பைக்குள் இருந்தன. அவன் ஞான விசாரம் செய்பவன் போல காணப்படுகிறான். அவன் ''மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது. கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள். அப்பொழுது கண்டடைவீர்கள். தட்டுங்கள் அப்பொழுது திறக்கப்படும். ஏனென்றால் கேட்கிறவனே பெற்றுக்கொள்கிறான். தேடுகிறவனே கண்டடைகிறான். தட்டுகிறவனுக்கே திறக்கப்படுகிறது. எதைத் தட்டுவது? எது திறக்கும்? எதைத் தேடுவது? என்ன கிடைக்கும்? எதைக் கேட்பது? என்ன கொடுப்பார்கள்? பிச்சையா சீ...சீ. இருக்காது ."[6]என்ற பைபிள் வாசகம் அவனின் கொள்கையாகிறது. அன்று அவன் எண்ணுகின்றபோது, அவன் தேடும் எச்சில் இலை ஒன்று அவனருகில் வந்துவிழுகிறது. இவன் பை, பைபிள் எல்லாவற்றையும் விட்டு விட்டு எச்சில் இலை எடுக்க ஓடுகிறான். அவன் தேடியது கிடைத்தது என்பதே அவனின் எதிர்பார்ப்பும் அவனின் வாழ்க்கையும் ஆகும். இந்த இலட்சியத்தில் மவுண்ட்ரோடு மைக்கேல் வாழ்கிறான்.*

**<u>நிறைவேறாத தாம்பத்யம்</u>**

*தலைச்சுமை மருமுத்துவுக்கம் ரஞ்சிதத்துக்கும் திருமணம் நடைபெற்ற நாள் அது. அந்நாளில் அவர்கள் இரவில் சந்திக்க வேண்டிய நேரத்தில் பல இடைஞ்சல்கள். காவலர் ஒருவர்*

*அவர்களைக் காவல் நிலையத்தில் விசாரணைக்காக அழைத்துச் செல்ல அவர்களின் தாம்பத்யம் நிறைவேறாமல் போகிறது.*

*''கஞ்சியில்லாட்டியும் நமக்குன்னு ஒரு குடிசையாச்சும் இருக்குமில்லே... பட்டினியோட ஒருத்தருக்கும் தெரியாம கவுரவமா படுத்துக் கெடக்கலாமில்லே. சீச்சீ இது என்ன பொழைப்பு? தெருவிலே கண்ணாலம் கட்டிக்கினும், தெருவிலே புள்ளை பெத்துகினு, தெருவிலேயே செத்தும் போறது... என்று சலிப்புடன் வெறுப்புடன் துயரத்துடன் ஏமாற்றத்துடன், ஏக்கத்துடன் முனகிக் கொண்டாள் ரஞ்சிதம்*[7] *என்ற ரஞ்சிதத்தின் ஏக்கம் ஜெயகாந்தனின் படைப்பாளுமையால் வெறுப்பு, துயரம், ஏமாற்றம், ஏக்கம் ஆகியவற்றுடன் வெளிவருகிறது.*

**<u>எறும்பும் சோம்பேறி மனித குலமும்</u>**

*சுறுசுறுப்பிற்கு இலக்கணம் எறும்பு. அந்த எறும்பு பேசும் கதையாக அமைவது ஒரு பிரமுகர் என்ற கதை. அந்த எறும்பு மனிதர்களைப் பார்த்துக் கிண்டலும் கேலியும் செய்கிறது.*

*''யாரது , மனுசப் பசங்களா? சுத்த சோம்பேறிகள்.*

*திடீரென்று அதற்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது. உலகில் மனுசப் பசங்க ஜாஸ்தியா? எறும்புக் கூட்டம் ஜாஸ்தியா? யோசித்து யோசித்துப் பார்த்தது. அந்தக் கணக்கு அதற்குச் சரிவரவில்லை. அவர்களில் யாரையாவது கூப்பிட்டுக் கேட்டால் என்ன? அதுவும் சரிதான்''*[8] *என்று மனிதர்களை ஏளனம் செய்கிறது கட்டெறும்பு கட்டெறும்பு மனிதர்களின் சோம்பேறித் தனத்தைப் பார்த்து ஏளனம் செய்யம் நிலையில் இக்கதை அமைக்கப்பெற்றுள்ளது.*

**<u>தங்கம் தணிக்காத தணிகாசலம்</u>**

*வயதான காலத்தில் தணிகாசலம் தன் முதல் காதலி தங்கத்தை அவளை அடைய அவர் செய்த முயற்சியை, அவள் அவரிடம் இருந்து வெளியேறிய நிலையைக் காட்டும் கதை திரஸ்காரம் என்ற கதையாகும். தங்கம் என்ற இளம் பெண் தனியாக வாழும் தணிகாசலம் என்ற இளைஞனுக்கு வீட்டு வேலைகள் செய்து பணிபுரிந்து வந்தாள். ஒரு மழைநாளில் அவள் தணிகாசலம் வீட்டில் இருக்க வேண்டிய நிலையில் தணிகாசலம் அவளை தனக்கு உடன்படச் செய்ய முயற்சிக்க அவள் விலகுகிறாள். இந்த காயம் தணிகாசலத்தின் வாழ் நாள் முழுவதும் தேங்கி நிற்கிறது. ''அதற்கென்ன? தணிகாசலத்திற்கு ஒரு பெண்ணும் கிடைத்தாள். அந்தஸ்தில் அழகில், கல்வியில், எல்லாவற்றிலும் உயர்ந்த பெண். அவளுடன் அவனும் வாழ்ந்தான். காலம் ஓடியது. அவன் இளமையை இன்பத்தை அழகை, மனைவியை எல்லாவற்றையும் இழுத்துச் சென்றது கால வெள்ளம்.*

*அவன் நினைவை..... அந்தக் காதலை*
*காதலா?*
*அவன் அனுபவித்தறியாத அவனால் அனுபவிக்க முடியாத ஒரு மாயை அது.*
*ஆம். காதலை நான் திரஸ்கரித்தேன். காதல் என்னை திரஸ்கரித்துவிட்டது. ''*[9]

*என்று தணிகாசலம் தன் நினைவில் ஆழ்கிறார். அவரின் காதல் அவருக்குள் அழியாமல் இருக்கிறது. அவர் தங்கத்தை விரும்பியதும் தங்கம் மறுத்ததும் இன்னும் ஆறாமல் அவருள் கனன்று கொண்டே இருக்கிறது. இவ்வாறு ஜெயகாந்தன் பாத்திரங்களின் படைப்பில் கொள்கை*

*ஆளுமைகளை உள்வைத்துக் கதைகளைப் படைத்துள்ளார். இது தனித்த இவரின் படைப்பாளுமைப் பண்பாகும்*

**<u>தொகுப்புரை</u>**

*ஜெயகாந்தன் சிறுகதை வடிவத்தைச் சிறப்பாகக் கையாண்டவர். அவரின் கதைகளில் பல்வேற கதைக் கருக்கள் உடையன. அவற்றில் மனிதநேயம் அடிப்படையாக அமைந்திருக்கும். சாலையோரத்தில் வசிக்கும் மக்களின் வாழ்க்கையை எழுதிய எழுத்தாளர் இவர் மட்டுமே. சாலையோரத்தில் வாழும் மக்களை தம் கதைப் பாத்திரங்களாக ஆக்கி அவர்களின் உள்ள உணர்வை வெளிப்படுத்திய எழுத்தாளர் இவர். இவரின் கவிதைகளில் பாத்திரங்கள் கொள்கை சார்ந்து இயங்குவனவாகப் படைக்கப்பெற்றுள்ளன. ஒவ்வொரு பாத்திரமும் தனக்கான கொள்கையை ஏற்று அதில் வெற்றி காணும் நிலையில் இவரால் படைக்கப் பெற்றுள்ளது. பெரிய அதிகாரி முதல் மனநலம் குன்றியவர் வரை இவரின் பாத்திரங்கள் அமைந்துள்ளன. இவர்கள் அனைவரின் உள்ள அடுக்கில் உள்ள உணர்வுகளை இவர் வெளிக் கொண்டுவருகிறார்.*

***சான்றாதாரங்கள்***


1. *மு.சுதந்திர முத்து, படைப்புக்கலை, ப. 107*
2. *தா.ஏ. ஞானமூர்த்தி , இலக்கியப் படைப்பியல், ப. 43*
3. *ஜெயகாந்தன் ஒரு பிடி சோறு, ஜெயகாந்தன் சிறுகதைகள் , முதல் தொகுதி ப. 202*
4. *பால்பேதம்மேலது ப. 224*
5. *ராஜா வந்துட்டாரு மேலது ப. 229*
6. *எது. எப்போது, மேலது, ப. 245*
7. *தாம்பத்யம், மேலது, ப. 253*
8. *ஒரு பிரமுகர், மேலது, ப. 259*
9. *திரஸ்காரம், மேலது, ப. 263*


****** ********** ********** **********